Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 332

புதன்கிழமை
23 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"யாழ்ப்பாணத்தில
இருக்கிற பயம்
இன்னும் போகேலை
கோத்தாவுக்கு"



# லலித், குகன் வழக்கில் முன்னிலையாகத் தயார்

## யாழ். நீதிமன்றம் மட்டும் வேண்டாம் உயர்நீதிமன்றில் கோத்தா அறிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 23**

**மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான லலித், குகன் இருவரும் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில், யாழ்ப்பாணம் நீதிமன்றம் தவிர வேறு எந்த நீதிமன்றத்திலும் முன்னிலையாகத் தயார் என்று முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

15

## ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையரை மீட்பதில் சிக்கல்

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 23

ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்களை மீட்பதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பலநூறு இலங்கையர்கள் ஊதியத்துக்காகவும், குடியுரிமைக்காகவும், தொழில்

15

### அடிப்படை உரிமை மீறல்

## ரணிலுக்கு எதிராக வருகின்றது வழக்கு

### உயர் நீதிமன்றம் அனுமதி!



கொழும்பு, ஒக். 23

இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாகக் குறிப்பிடுவதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

2022ஆம் ஆண்டில் சோஷலிச மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த

15




## போதை மாத்திரைகளுடன் ஒருவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து, ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

15

### வடக்கு - கிழக்கு

## காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி அநுர கவனம்!

### ஆளுநர்களிடமும் சுட்டிக்காட்டினார்



கொழும்பு, ஒக். 23

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில், ஜனாதிபதியின் தலைமையில் நேற்று நடைபெற்ற ஆளுநர்களின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கந்தளாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பிலும் இந்தக் கலந்துரை

15

## மாகாணசபைகளை மேம்படுத்த உதவுக!

### ஆளுநர்களுடனான உரையாடலில் ஜனாதிபதி அநுரகுமார கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 23

மாகாணசபை பொறிமுறையை மேலும் வினைத்திறனாக மாற்றுவதற்குரிய பரிந்துரைகளைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், ஆளுநர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஜனாதிபதி

15

## ஆலய உண்டியலை திருடியவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம் தென்மராட்சி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய உண்டியலைத் திருடிக்கொண்டு தப்பியோடியவர் ஆலய காவலர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு 6 மணியளவில் ஒருவர் தனக்கு பசிப்பதாகவும், ஏதாவது உணவு இருந்தால் தருமாறும் ஆலயக் காவலர்களிடம் கோரியுள்ளார்.

15

## சீனாவிடமிருந்து ரூ.30 மில்லியன்

கொழும்பு ஒக். 23

அண்மையில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சீன அரசாங்கம் 30 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

15

## சிறுமி துஷ்பிரயோகம்: சந்தேகநபருக்கு வலை

முல்லைத்தீவு, ஒக். 23

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 15 வயதுடைய சிறுமியை பாலியல் துஸ்பிரயோகம் செய்ததாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு தொலைபேசி ஊடாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

15

## பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பிக்கக் கலந்துரையாடல்!



யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணப் பொருளாதார மத்திய நிலையத்தை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன்

15

## அரிசி விலையில் மாற்றம் இல்லை!

கொழும்பு, ஒக். 23

அரிசியின் நிர்ணய விலையில் எவ்வித மாற்றத்தையும் மேற்கொள்ள எதிர்பார்க்கவில்லை

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை அரசியல் பழிவாங்கலே!



## விஜித ஹேரத் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.23**

**அரசியல் பழிவாங்கல் நோக்கம் கொண்டு வெளியான உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கையை நாம் ஏற்கமாட்டோம். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை முன்னெடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசாரணையைக் குழப்பும் நோக்கிலேயே ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோரை நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. அவ்வாறான வலியுறுத்தல்களுக்கு நாம் அடிபணியமாட்டோம்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்கு முறையான விசாரணை அவசியம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுவந்தது. கத்தோலிக்க சபையும் இந்த வேண்டுகோளை முன்வைத்திருந்தது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாம் விசேட விசாரணையை ஆரம்பித்துள்ளோம்.

அரசியல் நோக்கங்களுக்காகவே ரணில் விக்கிரமசிங்கவால் அல்விஸ் குழு அமைக்கப்பட்டது.

குழுவுக்கு தலைமை தாங்கிய ஓய்வுபெற்ற நீதிபதி அல்விஸ் தொடர்பிலும் சர்ச்சைகள் உள்ளன. நீதிச் சேவை ஆணைக்குழுவால் அவர் சேவையில் இருந்துகூட நீக்கப்பட்டுள்ளார்.

ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகிய இருவரையும் இலக்கு வைத்தே குழு அமைக்கப்பட்டது என்பது புலனாகின்றது.

நாம் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவொன்றை அமைத்த பின்னரே இலக்கு வைக்கப்பட்டுள்ளது. உதய கம்மன்பிலவுக்கு பின்னால் கரமொன்று இருக்கலாம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்போம். இது விடயத்தில் பொறுப்புடன் செயற்படுவோம். அதிகாரிகள் தவறிழைத்திருந்தால் தராதரம்பாராது நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச-44)

# யாரை நிராகரிக்கவேண்டும் மக்களிடம் தெளிவு தேவை

## சிறீதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதற்கப்பால், யாரை நிராகரிக்க வேண்டும் என்பதில் எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான சி.சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மாற்றம் என்னும் மாய அலையின் பின்னாலும், இளையவர்கள் புதியவர்கள் என்ற போர்வையிலும் மக்களைக் குழப்பி, வாக்குகளைச் சிதறடிக்கும் சமநேரத்தில் தேசியக் கட்சிகளோடு ஐக்கியமாகி இனத்தின் இருப்பையே இல்லாமற்செய்யும் பேரினவாத நிகழ்ச்சி நிரல்கள் குறித்து எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். எமது மக்களின் 70 ஆண்டுகால அரசியல் அபிலாசைகளை நீர்த்துப்போகச் செய்யும் சக்திகளை, சமரசங்களுக்கு இடமற்று எமது மக்கள் நிராகரிக்க வேண்டும். - என்றார். (ச-26)

# டொலர் எங்கே? வெளிப்படுத்துவேன்

## திலித் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.23

நாட்டிலிருந்து வெளியே கொண்டு சென்ற டொலரை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால் அதற்காக முழு ஒத்துழைப்பை வழங்குவேன் என சர்வமக்கள் சக்தியின் தலைவர் திலித் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

நாட்டிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட டொலர் உகண்டாவில் இல்லை. அவை எங்கே உள்ளன என்று என்னால் வெளிப்படுத்த முடியும்என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-25, சி)

# ரோஹித மருமகன் வீட்டில் சொகுசு வாகனங்கள் மீட்பு

கொழும்பு, ஒக்.23

சட்டரீதியான ஆவணங்கள் இல்லாத அதிசொகுசு வாகனங்கள் இரண்டை முன்னாள் அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தனவின் மருமகனுடைய வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி 6 கோடியை அண்மித்ததாக இருந்ததோடு அவை தீர்வை வரி செலுத்தப்படாது துறைமுகத்திலிருந்து இரகசியமான முறையில் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை ரோஹித மருமகன் கண்டியில் பெரியளவில் மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் தொழிலதிபரின் மகன் எனவும் பொலிஸாரால் கூறப்படுகிறது. (ச-25, சி)

# ஐ.ம.சக்தியிலிருந்து விலகினார் தமிதா



கொழும்பு, ஒக்.23

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடவிருந்து இறுதிநேரத்தில் நீக்கப்பட்ட நடிகை தமிதா அபேரத்ன புதிய கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் தமிதா அபேரத்ன ஐக்கிய மக்கள் சக்தியினுடைய சகல பொறுப்புகளிலிருந்தும் நீங்கி தபால்பெட்டியை சின்னமாகக் கொண்ட ஜனநாயக தேசியக்கூட்டமைப்புடன் இணைந்துள்ளார்.

நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியினுடைய இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டபோதும் கடைசி நிமிடத்தில் தமிதாவின் பெயர் வெட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-45-சி)

# சிலிண்டரின் விருந்து ஆணைக்குழு தடை

கொழும்பு, ஒக்.23

நாடாளுமன்றத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகின்ற புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு வேட்பாளர்களால் தமது கட்சிக்காரர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரவுநேர விருந்துபசாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு தேர்தல் விதிமுறைகளை மீறுவதாக அமைவதால் உடனடியாக விருந்துபசாரத்தை நிறுத்துமாறு விடுதி நிர்வாகத்துக்கு அறிவுறுத்தப்பட்டது.

விருந்துபசாரத்தில் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் அநுராத ஜெயரத்ன ஆகியோரும் கலந்துகொள்ள இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25, சி)

# பொதுநலவாய மாநாடு; அநுர அரசு புறக்கணிப்பு

கொழும்பு, ஒக். 23

தென்பசுபிக் பிராந்திய நாடான சமோவாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்கமாட்டார்.

அதிகாரிகள் மட்டத்திலான குழு பங்கேற்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் மாநாட்டுக்குச் செல்ல மாட்டார். எனினும், வெளிவிவகார அமைச்சு மற்றும் பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று மாநாட்டில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பிரிட்டிஷ் மன்னர் மாநாட்டுக்கு தலைமை வகிப்பார். பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அரச தலைவர்கள் அல்லது வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்பது வழமை.

இதேவேளை முன்னர், ஜே.வி.பி.யாக இருந்தகாலகட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பொதுநலவாய அமைப்பு தொடர்பில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-44)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு ஆசனங்களை நிச்சயம் பெறுவோம்

வவுனியா, ஒக். 23
வன்னியில் இரண்டு ஆசனங்களைப் பெற்று நிச்சயமாக முன்னணி இடத்தை அடைவோம் என ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியில் போட்டியிடும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வன்னித் தேர்தலில் வரக்கூடிய ஆசனங்களில் ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களை பெற்று நிச்சயமாக முன்னணி இடத்தை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். இந்தத் தேர்தலில் ஓர் ஆசனம் கிடைத்தாலும் அது எங்களது வெற்றியாகவே பார்க்கின்றோம்.
மக்கள் தங்களுக்கு எந்தக் கட்சி தேவை அல்லது எந்தக் கட்சி தங்களது பிரச்சினைகளை சரி யான முறையிலே கையாளும் என்பதை தெளிவாகப் புரிந்துகொண்டவர்கள் - என்றார். (ச-110,113)

## குகதாசனின் பரப்புரை பணிகள்



திருகோணமலை, ஒக்.23
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரும், திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான சண்முகம் குகதாசனின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் மூதூர் கிழக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. திருகோணமலை யின் பல பகுதிகளிலும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டன. (ச-25)

## வேட்புமனு நிராகரிப்பு தீர்ப்பு இன்று

கொழும்பு, ஒக். 23
ஜனநாயக தேசிய முன்னணியின் வன்னி மாவட்டத்துக்கான வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பான வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.
ஜனநாயக தேசிய முன்னணியின் வன்னி மாவட்டத்துக்கான வேட்பு மனு மாவட்ட தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டிருந்தமையும் அதனை எதிர்த்து ஜனநாயக தேசிய முன்னணி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ.6)



## தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 23
எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்குக் குழுக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.
கலந்துரையாடலில் நாடாளுமன்றத் தேர்தலில் குழுக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு ஆராயப்பட்டன.
யாழ்.மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.சிறிமோகனன், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ச-66)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.போதனாவுக்கு

# கண் சத்திரசிகிச்சைப் பிரிவு அமைக்க காணி நன்கொடை

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்.போதனா மருத்துவமனைக்கு உரிய அதிநவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட தெற்காசிய வலயத்தின் மிகச்சிறந்த கண் சத்திரசிகிச்சைப் பிரிவை அமைப்பதற்காக காணி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

அரியாலை மத்திய விளையாட்டுக்கழகத்துக்கு முன்பாக உள்ள இரண்டரை ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்பை அமெரிக்காவில் வசிக்கும் சுப்ரமணியம் தர்மேந்திரா என்பவர் நன்கொடையாக வழங்கியுள்ளார். இந்தக் காணியில் அண்மையில் யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தலைமையில் காணியைத் துப்புரவு செய்யும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச-20)



## கால்நடைகளை கட்டி வளர்க்குக

யாழ்ப்பாணம், ஒக். 23

தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்பயிர்கள் முளைக்க ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் நெல் அறுவடை முடியும் வரை கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு பிரதேச கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. தவறும் பட்சத்தில் கட்டாக்காலி கால்நடைகளாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளனர். (ச-25, 9)

## செல்வின் நியமனம்; மறுபரிசீலனை செய்க

கொழும்பு, ஒக்.23

பனை அபிவிருத்திச்சபை தலைவராக நியமிக்கப்பட்ட இரேனியஸ் செல்வினின் நியமனத்தை மறுபரிசீலனை செய்யுமாறு பனைசார் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தோட்ட உட்கட்டமைப்பு, அமைச்சர் விஜித ஹேரத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

செல்வின் பனை அபிவிருத்திச்சபை பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருந்த காலத்தில் அவருக்கு எதிராகப் பல நிதி மோசடிக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் புதிய அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பிப்பதுடன் செல்வினின் நியமனத்தை மறுபரிசீலனை செய்யுமாறும் பனைசார் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ச-25,6)

## பனை மரங்கள் கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 23

சட்டவிரோதமாக பனை மரங்களை கடத்திச் சென்றவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது பனைமரங்களும், அவற்றை கொண்டு செல்வதற்குப் பயன்படுத்திய வாகனமும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அளவெட்டியைச் சேர்ந்த 41 வயதுடையவர், காரைநகரிலிருந்து அளவெட்டிக்கு பனைமரங்களை கடத்திச் செல்ல முற்பட்டுள்ளார். இதன்போது அவர் பொன்னாலையில் வைத்து வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-27)

## தமிழ்த்தினப் போட்டி ஹாட்லி சாதனை

யாழ்ப்பாணம்,ஒக்.23

தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் சாதனையீட்டியுள்ளனர்.

தனியிசை - பிரிவு -3 இல் வாணிமுகுந்தன் மோசிகீரன் முதலாமிடத்தையும் தனிஇசை பிரிவு - 4 இல் திருமாறன் ஹரிபிரசாத் முதலாமிடத்தையும் பேச்சுப் போட்டியில் பிரிவு -5 இல் சி. அனந்திகன் இரண்டாமிடத்தையும் குழுஇசையில் பிரிவு -2 முதலாமிடத்தையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-26)

## கட்டடம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

அரியாலை பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நவீன வசதிகளைக் கொண்ட கிளைக் கட்டடம் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சந்திரசேகரனால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் சங்க அங்கத்தவர்கள் போன்றோர் கலந்துகொண்டனர். (ரி-17)



## கண்காட்சியும் நூல் அறிமுகமும்

யாழ்ப்பாணம்,ஒக்.23

கையெழுத்துப்பிரதிகளின் கண்காட்சியும், நூல்கள் அறிமுகமும் கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் நாளை வியாழக்கிழமையும், மறுநாள் வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. (ச-25)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர் களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். எதிர்பார்த்த காரியம் நடக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்** : தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவை யற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாற்றமா? ஏமாற்றமா?

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் மீண்டும் பேசு பொருளாகியிருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் நிலையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பாகவும், கடந்த காலங்களில் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கைகள் தொடர்பாகவும் சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன.நாட்டின் ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றிருக்கும் நிலையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று அறிவித்திருந்தார். இந்தத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்குத் தங்களது அரசாங்கம் எந்தவிதத்திலும் தயக்கம் காட்டாது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இலங்கையை உலுக்கிய இந்தப் பயங்கரவாதச் சம்பவம் தொடர்பாக எவ்வித சமரசமும் இன்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

இந்தப் பின்னணியில், பிவிருது ஹெல உறுமயவின் தலைவர், முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில சில சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கின்றார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக கடந்த அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுகளின் அறிக்கைகளை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மூடி மறைக்கின்றது என்று குற்றஞ்சாட்டியிருக்கின்றார் உதய கம்மன்பில. அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகத் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் ரவி செனவிரத்ன, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர் என்பதும் அவரது பிரதான குற்றச்சாட்டுகளில் ஒன்று. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை வெளியிடப்படாமல் உள்ள இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் வெளிப்படுத்தப்படும் என்று அறிவித்திருந்த அவர், அவற்றில் ஒன்றை நேற்றுமுன்தினம் வெளியிட்டு இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கின்றார். ஆனால் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இதை உடனடியாக மறுத்திருக்கின்றது. இந்த விசாரணை அறிக்கைகளில் நம்பகத்தன்மை இல்லை என்பதும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக புதிதாக - முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதும் அநுர அரசாங்கத் தரப்பின் வாதம்.

எனினும், இந்த விடயத்தில் கவனிக்கவேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன. கடந்த அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள், அவற்றின் தொடர்ச்சியாக சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளின் நம்பகத் தன்மையில் சந்தேகங்கள் இருந்தாலும், அந்த விசாரணைகளை முழுமையாக நிராகரித்துவிடவும் முடியாது. அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பொத்தாம் பொதுவாக நிராகரிக்காமல், அதில் உள்ளவற்றை ஆராய்ந்து உய்த்தறிய வேண்டியதும் அவசியமாகும். நாட்டின் மாற்றத்தை ஏற்படுத்தும் கோஷத்துடன் அதிகாரத்துக்கு வந்திருக்கும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இதில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும். அந்த அறிக்கைகளில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரை உயர் பதவிக்கு அதுவும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் நியமித்திருப்பது பல கேள்விகளை உருவாக்கும் என்பது நிச்சயம். அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை விசாரணைக்குட்படுத்தி, உண்மைகளை வெளிப்படுத்திய பின்னர் இந்தப் பதவி நியமனம் இடம்பெற்றிருந்தால் இந்த விடயம் பேசுபொருளாவதற்கு எந்த வாய்ப்பும் இருந்திருக்காது. ஆனால் மாற்றம் என்ற வாக்குறுதியுடன் பதவிக்கு வந்துள்ள இந்த அரசாங்கம், கடந்த காலங்களில் கடந்த அரசாங்கங்கள் கொண்டிருந்த வழியிலேயே பயணிக்க முயற்சிக்கின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தில் நீடிக்கும் மர்மம் விலகவேண்டுமானால் - நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமானால் - தாக்குதல் சம்பவங்களில் தொடர்பிருக்கலாம் என்று கருதப்படும் அனைவரும் அவர்கள் அரசாங்கத்தின் பக்கத்தில் இருந்தாலும், எதிர்க்கட்சிகளின் பக்கத்தில் இருந்தாலும் பாரபட்சமின்றி விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப்படவேண்டும். அவ்வாறு நடந்தால் மட்டுமே இந்தக் கொடூரச் சம்பவத்தின் பின்னணி வெளிப்படும். கடந்தகாலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் அவ்வாறு நடக்காமையே பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. தற்போது ஆட்சியில் இருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவும் அவ்வழியிலேயே நடப்பாரானால், மாற்றம் என்ற மக்களின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகவே முடியும்.






# கடன்பட்ட நாடுகள் இலங்கை நீக்கம்!

**கொழும்பு, ஒக்.23**

**கடனளிப்பவர்கள் தரப்புகளுடன் மேற்கொள்ளப்பட்ட கடன் சீர்திருத்தங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தவுடன், சர்வதேச நாணயநிதியத்தின் மிகைக்கட்டண நாடுகள் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்படவுள்ளது.**

சர்வதேச நாணயநிதியம், அண்மையில் இதற்கான ஒருமித்த கருத்தை எட்டியுள்ளது.
சர்வதேச நாணயநிதியத்தால் விதிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய மிகைக்கட்டணங்களை எதிர்கொள்ளும் 22 கடன்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் கடந்த ஆண்டு இணைக்கப்பட்டது. இந்தநிலையில் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தவுடன், மிகைக்கட்டணங்களை செலுத்தும் நாடுகளின் எண்ணிக்கை 19 இல் இருந்து 11 ஆக குறையவுள்ளதாக சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது. அதிலேயே பெனின், கோட் டி ஐவரி, காபோன், ஜோர்ஜியா, மோல்டோவா, செனகல், கரினாம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பட்டியலில் இருந்து நீக்கப்படவுள்ளதாக நிதியம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## 'தூய்மையான இலங்கை' அரசாங்கம் செயற்றிட்டம்

கொழும்பு, ஒக். 23
'தூய்மையான இலங்கை' செயற்றிட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆரம்பித்து வைத்துள்ளார். இயற்கை அழகையும் பொது இடங்களிலும்,கரையோரப்பிரதேசங்களிலும் தூய்மையைப் பேணுவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். 2025 ஆம் ஆண்டு கணிசமானளவு உல்லாசப்பயணிகள் வருகையை எதிர்பார்ப்பதாகவும், உல்லாசப்பயணிகள் வருகைக்கு தூய்மையான சுற்றுச்சூழலும் சிறந்த வாழ்க்கைத்தரமும் அவசியம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ரி-45-6 சி)

## பொலிஸ் மோசடி அறிவிக்க '1997'

கொழும்பு, ஒக்.23
பொலிஸாரால் ஏதேனும் முறைகேடு அல்லது மோசடி நடந்தால் இதுதொடர்பில் தெரிவிப்பதற்காக அவசரத் தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 1997 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இதுதொடர்பான தகவல்களை அறிவிக்க முடியுமெனப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவித்துள்ளார். (ச-66)

## 8,000 கண்காணிப்பாளர்கள்



கொழும்பு, ஒக். 23
நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் உள்நாட்டு, வெளிநாட்டவர்கள் அடங்களாக 8 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர்.
நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 14ஆம் திகதியும் தபால்மூல வாக்களிப்பு ஒக்ரோபர் 31, நவம்பர் முதலாம் மற்றும் 4ஆம் திகதிகளில் இடம்பெற உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ச)

## தபால்மூல வாக்களிப்பு; விண்ணப்பங்கள் உயர்வு

பொதுத்தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம் இம்முறை பொதுத் தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்காக 7 இலட்சத்து 59,210 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 20,551 விண்ணப்பங்கள் நிராகரிக்க ப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச)

**நாளை**

24.10.2024

**வியாழக்கிழமை - ஐப்பசி - 07**

சுபநேரம் : 07.32- 09.02

ராகுகாலம் : 01.32 - 03.02

**நாளொரு நல்வார்த்தை**

**நம்பிக்கையால் பார்க்க வேண்டுமானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும்.**

*- பிராங்க்ளின் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சோம்நாத்துக்கு விருது

இந்தியாவின் விண்வெளி ஆய்வு அமைப்பான, இஸ்ரோவின் தலைவர் சோம்நாத்துக்கு 'உலக விண்வெளி விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. விண்வெளித் துறையில் அவரின் முயற்சிகளைக் கௌரவிக்கும் விதமாகவே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (ம)

## இஸ்ரேல் தாக்குதல்

லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில், ஹிஸ்புல்லா அமைப்பு பயன்படுத்தும் நிதி நிறுவனங்களை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியுள்ளது. ஹிஸ்புல்லாவின் நிதிக் கட்டமைப்பை குலைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம)

யாழ்ப்பாணம், ஒக் 23

இன்பக்கரம் அறக்கட்டளை அமைப்பினூடாக 'முன்பள்ளியை அழகுபடுத்துதலும் மரநடுகையும்' என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தென்மராட்சி வரணி இயற்றாலை ரட்ணா முன்பள்ளி யின் மரநடுகை நிகழ்வு முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவர் தெ.மிகுந்தன் தலைமையில் பள்ளியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் சமூக சேவகருமான சி. பிரபாகரன், வரணிப் பிரதேச சுகாதாரப் பரிசோதகர் தெ. கலைவாசன், முன்பள்ளியின் பழைய மாணவரும் ஆயுள்வேத வைத்தியருமான வி. மிராஜ் கலந்து சிறப்பித்த் திருந்தனர். (ச-25, 159)

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 11 . 1944



மறைவு 21 . 10 . 2024

## அமரர் மரியாம்பிள்ளை யேசுதாசன் (மடுராணி)

யாழ்.அடைக்கலமாதா கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மடுராணி என அன்பாக அழைக்கப்படும் மரியாம்பிள்ளை யேசுதாசன் 21.10.2024 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான யோசவ் இரத்தினம் - அடைக்கலமேரி தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பமீனா (கிளி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றொசனி மற்றும் அனிஸ்ரஸ், அமலஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனற் நிலானி, டியூலாஷெரின் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, புஸ்பராணி, துரை சிங்கம் மற்றும் அலோசியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், கந்தசாமி, அருள்சீலி மற்றும் ராசாத்தி, விமலா, அன்ரன் (கனடா), சுரேந்திரன் (கனடா), புஸ்பராசா (டென்மார்க்), அருள்நேசராசா (டென்மார்க்), ஜெராட் செல்வராசா (சுவிஸ்), ஞானசீலி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற துரைநாயகம் மற்றும் தெய்வநாயகி (கனடா), ஜெயந்தி (கனடா), ஆகின் (டென்மார்க்), ஜெயந்தி (டென்மார்க்), ரேணுகா (சுவிஸ்), சௌந் (கனடா) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் காலஞ்சென்ற இம்மனுவல் மற்றும் பொன்மலர் தம்பதிகள், அருமைநாயகம்- தங்கம் தம்பதிகள் ஆகியோரின் அன்பு சம்பந்தியும் கவிஷன், கிஷோன், ஜடோன், சுவாஸ்கர் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23.10.2024 புதன்கிழமை பி.ப.3 மணிக்கு ஆனந்தன்வடலி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஆனந்தன்வடலி வீதி,
கொழும்புத்துறை.

தகவல்: குடும்பத்தினர்
0776445509
077 9220889

# மரண அறிவித்தல்



## தண்டிகைநாச்சி கந்தசாமி

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட தண்டிகைநாச்சி கந்தசாமி (கடவுள் அம்மா, ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர்- யாழ். போதனா வைத்தியசாலை) அவர்கள் கடந்த 21.10.2024 அன்று சிவபாதம் அடைந்தார்.

அன்னார் நவரத்தினம் - செல்லம் தம்பதியரின் மகளும், வைரமுத்து - வள்ளிபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், டிவாகரி (கனடா), றஜிதாகரி (USA) ஆகியோரின் தாயாரும், கிருபாலிங்கம் சுதர்சன் (கனடா), மாகாலிங்கம் நரேந்திரன் (USA) ஆகியோரின் மாமியாரும், ஹரிசன், டிதர்சன், கைலேசன், எமி சகானா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, சுப்பிரமணியம், தங்கம், வைத்திலிங்கம் மற்றும் திருமதி வள்ளியம்மை, திருமதி முத்தீஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரியும், பெரிய தம்பியின் (லண்டன்) மைத்துனியும் ஆவர்.

அன்னாரது இறுதிக் கிரிகைகள் நாளை (24.10.2024) வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு அச்செழுவிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுகொள்ளவும்.

முகவரி:

தகவல்:
மகள் - டிவாகரி (+164 732 85221)
மகள் - றஜிதாகரி (+151 694 32901)

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 08 . 1930



மறைவு 21 . 10 . 2024

## திரு. தம்பிராசா பொன்னம்பலம்

(Retired Civil Engineer)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாக கொண்டவருமான திரு.தம்பிராசா பொன்னம்பலம் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மீனாட்சி (Retired Staff Nurse) மற்றும் பவளத்தின் அன்புக் கணவரும் சாந்தினி . குணாநந்தன் (Canada), நிலானி (Canada), ஜெகாநந்தன் (London) ஆகியோரின் அன்புத் தந்தையும் இரவீந்திரன் (Retired Executive Engineer), இவாஞ்சலின் (Canada), சுவேந்திரன் (Canada), யாழினி (London) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகேஸ்வரி, தியாகராஜா (Retired Area Manager -CPC), நவஜோதி (Canada) காலஞ்சென்றவர்களான செல்லம், கனேசன் (Auditor Port Authority), புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயந்திமலர் காலஞ் சென்றவர்களான பொன்னையா (முன்னாள் அரச உத்தியோகத்தர்), கமலா, அலெக்சாண்டர் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்), துரைராசா (முன்னாள் மத்திய வங்கி அதிகாரி), அகஸ்தின் (முன்னாள் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மிதிலா, சுஜிதா, ஜெனிபர், நிரோஜன், ஜோய் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.591 காலி வீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (24.10.2024) வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பவளம் பொன்னம்பலம் (மனைவி) - 076 985 2903
திருமதி சாந்தினி இரவீந்திரன் (மகள்) - 077 933 6793
திரு. இரவீந்திரன் (மருமகன்) - 076 664 2970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிற்றல் வளர்ச்சிக்கு விரைவில் புதிய அமைச்சு



**கொழும்பு, ஒக்.23**

**டிஜிற்றல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு டிஜிற்றல் அமைச்சொன்று ஸ்தாபிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையை டிஜிற்றல் மயப்படுத்துவதற்காக நிபுணர் ஒருவர் இலங்கைக்கு வரவுள்ளார். உலகத்தில் முன்னிலை வரிசையில் இருக்கின்ற பல நிறுவனங்களில் பல மில்லியன் ரூபா அளவில் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கின்ற நிபுணரே இலங்கை வருகிறார்.

இலங்கை நாட்டினுடைய அரச பிரிவுகள் சகலவற்றையும் டிஜிற்றல்மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டு அவர் தாமாகவே முன்வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி-45-சி-44)

## என்.வி.சுப்பிரமணியத்தின் பரப்புரைகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஒக். 23

பொதுத்தேர்தலில் சுயேச்சைக் குழு 16 இல் நெல்லுக் கொட்டகை சின்னத்தில் போட்டியிடும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் முன்னாள் தலைவரும், அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்ட மைப்பின் தேசிய அமைப்பாளருமான என்.வி.சுப்பிரமணியதின் வேட்பாளர் அறிமுகமும் பிரசார நடவடிக்கை ஆரம்ப நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாயில் இடம்பெற்றது. சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தில் வழிபாடுகளுடன் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்பின்னர் சண்டிலிப்பாய்ப் பகுதிகளில் மக்கள் சந்திப்பும் இடம்பெற்றது. (ச-27)

## சீனி வரி மோசடி மீள் விசாரணை

கொழும்பு, ஒக்.23

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச காலத்திலேயே ஏற்பட்டதாக கூறப்படும் சீனி வரி மோசடி தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வார இறுதிப் பத்திரிகை ஒன்றிலே வெளியாகியிருந்த செய்தியின் பிரகாரம், கோத்தாபயவின் செயலாளர்களாக இருந்தவர்களின் தொலைபேசி இலக்கங்கள் விசாரணைக்குழுவினரால் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

சீனி வரி மோசடி தொடர்பாக இலங்கைக்கு 14 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதான இறக்குமதியாளர்களிடமிருந்து விஷேட சலுகையைப் பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதோடு இதன்மூலம் மோசடியாளர்கள் பெற்றுக்கொண்ட இலாபம் 6 பில்லியனுக்கும் அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-25-சி)

## பேஸ்புக் விருந்தில் போதைப்பொருள்

### *31 இளைஞர்கள் கைது*

நுவரெலியா,ஒக்.23

நுவரெலியா பிரதேசத்தில் விருந்தினர் விடுதி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முகப்புத்தக விருந்து ஒன்றுக்கு போதைப்பொருள்களைக் கொண்டுவந்த குற்றச்சாட்டில் 31 இளைஞர்கள் நுவரெலியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் - இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்துள்ளனர். அவர்களிடமிருந்து ஐஸ், மத்வினி, கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை நுவரெலியா நீதிவான் நிதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-25, சி)





## பொலிஸ் ரோந்து யாழில் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்.நகர் மற்றும் நகரை அண்மித்த புறநகர்ப் பகுதிகளில் பொலிஸாரின் இரவு நேரக் கண்பாணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. போதைப்பொருள் விற்பனையும், அவற்றின் பாவனையும் அதிகரித்து வருதால் ஏற்படும் சமூக சீரழிவுகளைத் தடுக்கும் முகமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் அதிகளவான பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ச-25, 17)

## சமிக்ஞைகளுடன் மோதி கப்ரக வாகனம் விபத்து

யாழ்ப்பாணம், ஒக்.23

கப்ரக வாகனமொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் பொருத்தப்பட்டிருந்த சமிக்ஞை பலகையை மோதித் தள்ளி விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்து பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மக்கேணியில் நேற்று நடைபெற்றது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப்ரக வாகனமே விபத்துக்குள்ளானது. விபத்தில் வாகனச் சாரதி மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார். விபத்து தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-113)



## தினம் தெரியுமோ?

**ப**ருவத்தே பயிர்செய் எண்டு எங்கட ஆக்கள் ஒண்டும் சும்மா சொல்லேலைத்தானே. அதையதை அந்தந்தக் காலத்துக்குள்ள செய்துமுடிச்சால் ஒரு சோலியும் இல்லை. ஆனால் எங்களில பெரும்பாலான ஆக்கள் அப்பிடியில்லை. கடைசிக்கட்டம் வருமட்டும் பேசாமல் இருந்திட்டு அதுக்குப் பிறகுதான் ஆத்துப் பதைச்சு, அவசரமா ஏதும் செய்யப்போய், கடைசியா எல்லாத்தையும் கெடுக்கிறதுதான் எங்கட ஆக்களுக்கு வாலாயமான விசயம். அப்பிடி ஒரு விசயம் தான் பொது வேட்பாளரா நிண்ட அரியத்தாருக்கும் நடந்திருக்குது. இந்தமுறை ஜனாதிபதி எலக்சனில நிண்ட ஆக்கள் எல்லாரும் தாங்கள் எலக்சனுக்காக எவ்வளவு சிலவழிச்சவை, அந்தக்காசு எப்பிடி வந்தது எண்டதையெல்லாம் கணக்கறிக்கையா தேர்தல் திணைக்களத்திட்ட குடுக்கோணும். இந்த விசயத்திலதான் அரியத்தாருக்கு ஒரு சிக்கல். அவரை எலக்சனில நிக்கவைச்சது பொதுக்கட்டமைப்பு எண்ட பேர்ல இருந்த அமைப்புகளும், கட்சியளும் தானே. அந்தப் பொதுக்கட்டமைப்பு எலக்சனுக்காக ஒரு நிதிக்குழுவை உருவாக்கி வைச்சிருந்தது. அப்ப அவைதான் அந்தக் கணக்கறிக்கையை தேர்தல் திணைக்களத்திட்ட குடுக்கோணும். அவையும் தாங்கள் அந்தக் கணக்கறிக்கையை உரிய இடத்துக்கு அனுப்பி வைச்சிட்டினம் எண்டு சொன்னதால, அரியத்தார் ஒரு சோலியும் இல்லை எண்டிட்டு தன்ர பாட்டில இருந்திட்டார்.

ஆனால் அந்தக் கணக்கறிக்கையை அரியத்தாரும் இன்னும் ரண்டுபேரும் தரேலை எண்டு எலக்சன் கொமிசன் அறிவிச்சதும், அரியத்தார் அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு 'என்னடா இப்பிடி ஒரு சோதினை?' எண்டு பொதுக்கட்டமைப்பில இருந்தவைக்கு போன் அடிச்சிருக்கிறார். அவையும் முதல் சொன்னமாதிரி 'குடுக்க வேண்டிய இடத்தில குடுத்திட்டமே' எண்டு சொல்ல, இவரும் 'அப்பிடியெண்டால் ஏன் நான் தரேலை எண்டு அறிவிச்சிருக்கிறாங்கள்' எண்டு கேட்டிருக்கிறார். அப்பதான் அந்த நிதிக்குழுவுக்கு ஒரு சந்தேகம், தாங்கள் அனுப்பின முறை சரிதானோ எண்டு. உடனை அவை ஈமெயில செக் பண்ணி இருக்கினம், அதில தேர்தல் ஆணைக்குழுவின்ர சரியான ஈமெயிலுக்குத்தான் அந்தக் கணக்கறிக்கை அனுப்புப்பட்டிருக்கு. அப்ப ஏன் அவை வரேலை எண்டு சொல்லுகினம் எண்டு பார்த்தால், அந்தக் கணக்கறிக்கையை நேரில கொண்டந்து குடுக்கவேணுமாம். அதுதான் ரூல்ஸாம். அதுக்குப் பிறகுதான் இவையள் ஓடித்திரிஞ்சு, பொதுச்சபையில இருந்த ஓராளை அவசரமா கொழும்புக்கு அனுப்பி, அடுத்தநாள் அந்தக் கணக்கறிக்கையை தேர்தல் திணைக்களத்துக்கு குடுத்து விட்டிருக்கினம். எண்டாலும் தேர்தல் திணைக்களம் எப்ப கணக்கறிக்கையைத் தரவேண்டிய கடைசி நாள் எண்டு அறிவிச்சுதோ, அதைவிட பன்னிரண்டு மணித்தியாலம் கழிச்சுத்தான், இவையள் அந்த அறிக்கையை ஒப்படைச்சிருக்கினம். அதால கணக்கறிக்கையை ஒப்படைச்சதை உறுதிப்படுத்திக் குடுக்கிற ரிசீட்டை தேர்தல் திணைக்களம் இவைக்கு தரமாட்டம் எண்டிட்டாம்.

இப்ப அரியத்தார் 'நீங்கள் ரிசீட்டைக் காட்டினால் தான் நான் கணக்கறிக்கையைக் குடுத்தனீங்கள் எண்டு நம்புவன்' எண்டு அடம் பிடிக்க, பிறகு ஒரு மாதிரி அவருக்கு பக்குவமா விசயத்தைச் சொல்லியிருக்கினம். அதுக்குப் பிறகுதான் ஆள் கொஞ்சம் அமைதியானாராம். சும்மா இருந்த அரியத்தாரை இப்பிடி பதறவைச்சிட்டாங்களே.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# கரைதுறைப் பற்று பிரதேசசபை முல்லைத்தீவு
# சபைநிதி 2024

1. கரைதுறைப்பற்று பிரதேசசபையானது, சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தலைவர், பெறுகைக்குழு, உள்ளூர் அதிகார பெறுகைசபை, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம், தகுதிவாய்ந்தஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காககோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் வீதி, கட்டுமானம் மற்றும் கட்டடநிர்மாணதுறையில் நிர்மாணகைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவுஅட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. தொலைபேசி:-024- 3243542 தெலைநகல்: 0212290001இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 23.10.2024 ம் திகதியிலிருந்து 04.11.2024 வரை காலை 09.00 மணி முதல் மாலை 02.30 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் இடத்திலிருந்து 23.10.2024 ம் திகதியிலிருந்து 04.11.2024 வரை வேலைநாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகைபணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு 05.11.2024 ம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 77 (எழுபத்தேழு-20.Jan.2025) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | PSDG/NP/MU/MPPS/2024/05 | Renovation (Tar) of Barathi Home Road At Mulliyawalai East | 7.627 | 77 நாட்கள் | C7 and C6 (வீதி) | 100,000.00 | 17/Feb/2025 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 01.11.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.
23.10.2024

(CR/43455) J-1

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்.நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண சொற்பொழிவுத்தொடர் சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக் கள் ஆசியுரையையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும் வழங்குவர். சைவப்புலவர், பிரசங்க பூஷணம் செ. த. குமரன் 'திருக்கைலாசப் படலம்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

*************

யாழ்ப்பாணம், ஒக்.23

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத் துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகாச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 28 நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர், பிரசங்க பூஷணம் ச. முகுந்தன் 'மாணிக்கவாசகரும் வாழ்த்துப்பத்தும்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

# கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் - வடக்கு மாகாணம்
## தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2025

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் அச்சுவேலி பிரதேசத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் அனிஞ்சியன்குளம் பிரதேசத்திலும், வவுனியா மாவட்டத்தில் பூந்தோட்டம் ஆகிய பிரதேசங்களிலும் காணப்படும் பிராந்திய கால்நடை இனவிருத்திப் பண்ணைகளில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக, தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

01. நியமிக்கப்படவுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை :07 (அச்சுவேலி -05, முல்லைத்தீவு -01, பூந்தோட்டம் -01)
02. நியமிக்கப்படவுள்ள தொழிலாளர்களின் ஒப்பந்த காலம் 1 வருடம்
03. ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகமைகள்
    - I. நன்னடத்தையுடையவராகவும், சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
    - II. அரச கால்நடைப் பண்ணை அல்லது கால்நடைத்துறை அலுவலகம் அல்லது அதுசார்ந்த வெளிக்களப் பணியொன்றில் முன் அனுபவம் உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.
    - III. கல்வித் தகைமை : க.பொ.த. சாதாரண பரீட்சையில் இரண்டு அமர்விற்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
04. அச்சுவேலி, அனிஞ்சியன்குளம், பூந்தோட்டம் ஆகிய பண்ணைகள் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அண்மையில் வசிப்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.(வதிவிடம் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)
05. விண்ணப்பிக்கும் முறை
    - I. பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் எமது பண்ணைகள் அமைந்துள்ள அச்சுவேலி, அனிஞ்சியன்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களில் ரூபா 20 செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.
    - II. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 2024.11.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாக "தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு செய்தல் - 2025" என குறிப்பிட்டு
      **மாகாணப் பணிப்பாளர்**
      **கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வடமாகாணம்**
      **பலாலி வீதி, திருநெல்வேலி,**
      **யாழ்ப்பாணம்,**
      என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
    - III. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்களிற்கான நேர்முகத்தேர்வு பற்றிய விபரங்கள் எம்மால் அறியத்தரப்படும்

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 0212212617 என்ற இலக்கத்திற்குத் தொடர்புகொள்ளவும்

Dr.S.வசீகரன்
மாகாணப் பணிப்பாளர்

(CR/43457) J-1

# புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்
திகதி:- 21.10.2024

PUTHUKKUDIYIRUPPU PALM RESOURCE DEVELOPMENT CO-OPERATIVE SOCIETY (LTD) புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உதவி தொழிற்சாலை முகாமையாளர்.
    சம்பளக் குறியீடு (110/10)
    சம்பள அளவுத்திட்டம் :-19745-225-10-250*10-24495.
02. பதவி :- கணக்காளர்
    சம்பளக் குறியீடு (104/04)
    சம்பள அளவுத்திட்டம் :- 23890-410*10-450*10-32490
03. பதவி :- களஞ்சியப் பொறுப்பாளர்
    சம்பளக் குறியீடு (202/09)
    சம்பள அளவுத் திட்டம் :- 20200-250*10-260*10-25300
04. பதவி :- கிராமிய வங்கி எழுதுநர்
    சம்பளக் குறியீடு (300/12)
    சம்பள அளவுத் திட்டம் :- 18820-170*10-185*10-22370.
05. பதவி :- எழுதுநர்
    சம்பளக் குயியீடு (302/12)
    சம்பள அளவுத்திட்டம் :- 18820-170*10-185*10-22370.
06. பதவி :- சாரதி
    சம்பளக் குறியீடு (312/13)
    சம்பள அளவுத் திட்டம் :- 18360-160*10-170*10-21660

**வயதெல்லையானது 18-45 வயதாகும்.**

பொதுவானது:- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய மாதாந்த இலாபத்தில் வாழ்க்கை செலவுப்படி- 7800.00 செயலாற்று கொடுப்பனவு - 1000.00 ரூபா பெற்றுக் கொள்ள முடியும் வயது எல்லை 18-45ற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வயது எல்லை இல்லை சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும் விண்ணப்பதாரி முல்லைத்தீவு மாவட்டத்தை சேந்தவராக இருத்தல் வேண்டும் சங்கத்தால் கோரப்படும் பிணையை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும் .

**விண்ணப்பங்கள் அனுப்புதல்**

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான தகைமைகளினை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இணையத்தள முகவரி www.np.gov.lk இன் சுற்றுநிருபங்கள் பகுதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கீழ் http:// np.gov.lk/cocoperative-employees-commission-circular-2021 என்ற இணையத்தளத்தில் பார்வையிட்டுக்கொள்ள முடியும் அல்லது அலுவலகத்திற்கு சமுகம் தந்து தகைமைகளைப் பார்வையிட்டு விண்ணப்ப படிவத்தினை பெற்று முழுமையாக பூரணப்படுத்தி படிவத்துடன் பிறப்பு சான்றிதழ் கல்வித்தகைமை சான்றிதழ், அன்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், தொழில் தகைமைச்சான்றிதழ், ஏனைய தகைமை இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 10.11.2024ம் திகதிக்கு முன்னதாக தலைவர் புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிருத்திக் கூட்டுறவுச்சங்கம் குழந்தையேசு கோவில் வீதி புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடல்வேண்டும்

மேலதிக தொடர்புகளுக்கு :- 0212061696.
பொதுமுகாமையாளர் :- 0776333144.

தலைவர்.
புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்

(CR/43454) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விவாதச்சமர்களில் யாழ்.இந்து வாகை

யாழ்ப்பாணம், ஒக்.23

கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான வருடாந்த விவாதச் சமர் யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்றது. நிகழ்வில் தமிழ் விவாதம் மற்றும் ஆங்கில விவாதப் போட்டிகள் நடைபெற்ற நிலையில் இரண்டு விவாதங்களிலும் யாழ். இந்துக் கல்லூரி அணி திறமையாக வாதாடி வெற்றிக் கேடயங்களைத் தனதாக்கியது.

(ச-25,66)



## டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் நாளை முதல் ஆரம்பம்

விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு வார நிகழ்வு நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை வரை யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன்போது சகலரையும் ஒத்துழைப்பு வழங்குமாறும், டெங்குப் பெருக்கத்துக்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்துப் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், யாழ். மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

(ச-45)



## சான்றிதழ் வழங்கலும் நூல் அறிமுக நிகழ்வும்!

வவுனியா,ஒக்.23

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியில் அமைதிவழி கல்வித் திட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், பிரேம் ராவத் எழுதிய 'உள்ளத்தின் குரல்' புத்தகத்தின் அறிமுக நிகழ்வும் வவுனியா தேசியக் கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி குணரட்ணம் கமலகுமார் தலைமையில் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது கல்வியியற்கல்லூரியில் ஆசிரியர்களாக கல்வி பயின்றுவரும் மாணவர்களுக்கு அமைதிவழி கல்வித்திட்டம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து உள்ளத்தின் குரல் புத்தகத்தின் அறிமுக உரையை சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி நளினி கணேசயோகமும், புத்தகத்தின் அனுபவ உரையை வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி ஜெ.பத்மாவதியும் வழங்கியிருந்தனர். நிகழ்வில் உப பீடாதிபதிகளான கெ.கரிகரசக்தி, கெ.யோகராசா மற்றும் விரிவுரையாளர்களான துணைவன் லிங்கேஸ்வரி, பத்மாவதி ஜெயச்சந்திரன், ராஜேந்திரன் மாலதி, அமைதி கல்வித்திட்ட வழிப்படுத்துனர்களான குகானந்தராஜா கீர்த்திகா, விமலநாத சர்மா மற்றும் ஆசிரிய மாணவர்களுடன் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

(ச-25, 110)

## நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக்.23



யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய் தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) கீழ்வரும் இடங்களில் வைத்து ஏற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறும், ஓர் நாய்க்கான உரிமம் கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு மருந்து ஏற்றப்படும் நிலையத்தின் விவரங்கள் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை சனசமூக நிலையம் ஆறுகால்மடத்திலும், மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப.1 மணி வரை செழியன் வீதியிலும், பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை புதிய குடியிருப்பு சனசமூக நிலையத்திலும், 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை ஆர்.சி. பாடசாலை நாவலர் வீதியிலும், மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப.1 மணி வரை ஆசாத் வீதியிலும், பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 4.மணிவரை 1ம்,2ம்,3ம் குறுக்குத்தெரு நாவலர் வீதியிலும், 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை சேமக்காலை வீதி கெனடி வீதியிலும், மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப.1 மணி வரை ஜின்னா வீதியிலும், பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சனசமூக நிலையம் வசந்தபுரத்திலும், 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை சூரியஒளி சனசமூக நிலையத்திலும், மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப.1 மணி வரை சென். நீக்கிலாஸ் சனசமூக நிலையத்திலும், பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நாவாந்துறை கோவில் ஒழுங்கையிலும், 4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை நாவாந்துறை காதி அபூபக்கர் வீதியிலும், மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப.1 மணி வரை கண்ணாபுரம் சனசமூக நிலையத்திலும் , பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கற்குளம் நாவாந்துறை வெள்ளாந்தெருவிலும், 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை சிவன் பண்ணை சீனிவாசகம் வீதிச் சந்தியிலும், மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப.1 மணி வரை கோணந்தோட்டத்திலும், பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சோலைபுரத்திலும் இடம்பெறவுள்ளது என யாழ். மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

(ரி)



## சிறப்புச்சிந்தனை நல்லூரில் அமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.23

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக் கலைக் கற்கை நெறியின் ஒரு பகுதியாக 'உடல் அமைப்பும் அதன் தொழிற்பாடுகளும்' எனும் தலைப்பில் சிறப்புச்சிந்தனை அமர்வு யாழ்.நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் காலை 8மணி வரை இடம்பெறவுள்ளது. நிகழ்வில் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் மருத்துவக் கலாநிதி யோ.யதுநந்தனன் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட இந்த வருடத்துக்கான தேசிய ரீதியிலான கராத்தே தொடர், கடந்த 17ஆம் 18ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரகம உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் சர்வதேச சக்குறா சோட்டோக்கான் கராத்தே சங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட கழக பிரதம ஆசிரியர் ஹென்சி எஸ்.விஜயராஜ் 50 - 55 வயதுப் பிரிவில் காட்டா, குமித்தே போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றார். (ம-22)

# கம்மன்பிலவை விட அநுர மிக மோசமான இனவாதி!

## விமர்சிக்கின்றார் சுகாஷ்



யாழ்ப்பாணம், ஒக். 23

உதய கம்மன்பில ஒரு இனவாதி என அனைவருக்கும் தெரியும். ஆனால் அவரை விட ஒரு மோசமான இனவாதி தான் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற வேட்பாளருமான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அராலியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இணைந்திருந்த வடக்கு - கிழக்கை நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு பிரித்தவர்கள் ஜே.வி.பி.யும் அனுரவும். சந்திரிகாவினுடைய ஆட்சிக் காலத்தில் அனுரகுமார விவசாய அமைச்சராக இருந்தபோதுதான் செம்மணியில் 600 இளைஞர்கள் கொலை செய்து புதைக்கப்பட்டார்கள்.

போரின் இறுதிக் கட்டத்தில் அநுரகுமாரவின் கட்சியும், அநுரகுமாரவும்தான் கொழும்பிலே சிங்கள மக்களை திரட்டி, முள்ளிவாய்க்காலில் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்த வேண்டும். இல்லாவிட்டால் பிரபாகரன் தப்பி விடுவார் என மஹிந்தவிக்கு அழுத்தம் கொடுத்து கொத்துக்கொத்தாக தமிழ் மக்களை கொன்று குவித்தமைக்கு காரணமானவர்கள்.

இப்போது உதய கம்மன்பில மீது, அநுரகுமார பழிபோட்டுவிட்டு தப்பிவிடுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அநுர ஜனாதிபதியாவதற்கு முன்பு, ஈஸ்டர் தாக்குதல்தாரிகளை தனக்குத் தெரியும் என்று சொல்லியிருந்தார். அப்படி என்றால் ஏன் அவர்களை இதுவரை கைது செய்யவில்லை?

ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகள் ராஜபக்ச குடும்பம் என்றால், மத்திய வங்கியின் ஊழல் குற்றவாளிகள் ரணில் விக்ரமசிங்கவும் அவருடைய தரப்பினரும். ஆகவே அநுரகுமார திஸாநாயக்க, சிங்கள மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமாக இருந்தால் ராஜபக்ச குடும்பத்தினரையும், ரணில் தரப்பினரையும் மறியலுக்குள் போடட்டும்.

தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்கிவிட்டு, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும், இனப் பிரச்சனைக்கும் ஒரு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச விசாரணையை நடத்தட்டும். அதற்குப் பின்னர் நாங்கள் அநுரகுமாரவை நம்புவதை பற்றி யோசிப்போம் என்றார். (ஓ-27)


# அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## நிரமாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ் மாவட்ட செயலகம், மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2025ம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42), மற்றும் பிரதேச செயலகங்களில் 2024-10-24ம் திகதி தொடக்கம் 2024-11-30ம் திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது www.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024-11-30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2025" எனக் குறிப்பிட்டு "அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டையை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் 2024-11-30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 2,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000க்கு அதிகமானதும் ரூபா 5,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000க்கு அதிகமானதும் ரூபா 10,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5,000 |

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

**பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளின் தொகுதி விபரம்**

பொருட்கள்
- காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள்.
- கணினிகள், அச்சிடும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்.
- அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள், மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
- இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
- இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்.
- வாகன உதிரிப்பாகம்
- விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள்
- காலை, மதிய, இரவு, உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள்.
- சுத்திகரிப்பு பொருட்கள்
- அழகு சாதனப் பொருட்கள்; பிளாஸ்ரிக், தோல் உற்பத்திகள் மற்றும் சமையல் உபகரணங்கள்
- கட்டிட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப்பொருட்கள்
- துணி வகைகள்
- தளபாடங்கள்
- விவசாயப் பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள்.
- மீன் பிடி உபகரணங்கள்
- மருத்துவ உபகரணங்கள்.
- சூரிய மின்கலம், உதிரிப்பாகங்கள் மற்றும் திருத்தங்கள்
- நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள்

**வேலைகள்**
- கட்டடங்கள்,
- வீதிகள்
- பாலங்கள்

**சேவைகள்**
- சுத்திகரிப்பு சேவை
- பாதுகாப்பு சேவை
- பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி, ஒளி சேவை
- படப்பிடிப்பு சேவை
- குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- போட்டோ பிரதி இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், கணினி வலையமைப்பு முறைமை, உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு வாகனம் வழங்கல்
- இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- ஏனைய சேவைகள்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்ட செயலாளருக்காக, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(CR/43456) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கவியோடு கதை பேசல்

சந்திரகுமார் யதுஷினி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

நாட்டார் இலக்கியத்தின் இதயமாக விளங்குகின்ற நாட்டார்பாடல் நாட்டுப்புறவியல் ஆய்வில் முக்கியம் பெறுகிறது. நாடோடிப் பாடல், கிராமியப் பாடல், பாமரப் பாடல், மக்கள் பாடல் என அழைக்கப்படுகின்ற, வாய்மொழியின் கதையாடல் முறையாக அமையும் இப்பாடல் மரபானது கிழக்கிலங்கை மக்களாலும் பாடப்பட்டு வந்துள்ளது.

நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், நாட்டார் இலக்கியம் (பாடல், கதை, நொடி எனப்படும் விடுகதை, பழமொழி, கதைப்பாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள், மந்திரங்கள்) என்பவற்றை ஆராய்ந்து ஆவணப்படுத்துவதாக நாட்டுப்புறவியல் அல்லது நாட்டாரியல் விளங்குகின்றது.

இந்தவகையில், கிராமங்களின் ஆற அமர்ந்த வாழ்க்கை முறையை, மக்களின் வாழ்வியல் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற இலக்கியப் பாரம்பரியத்தின் இதயமாக நாட்டுப்புறப் பாடல் காணப்படுகின்றது. நாடோடிப் பாடல், கிராமியப் பாடல், பாமரப் பாடல், மக்கள் பாடல் என அழைக்கப்படுகின்ற, வாய்மொழியின் கதையாடல் முறையாக அமையும் இப்பாடல் மரபானது, கிழக்கிலங்கை முஸ்லிம் சமூகங்களிடையே 'கவி' என்னும் சொல்லினால் குறிக்கப்படுகின்றது. குறிப்பாக, தாலாட்டுப் பாடல், விளையாட்டுப் பாடல், சமயப் பாடல், குழந்தைப் பாடல் என அடுக்கு முறையாக அமைகின்ற கிராமியப் பாடல் வகைகளுள் வடிவம், ஓசை என்பவற்றின் அடிப்படையில் தனிப்படுத்தி அமையக் காணப்படும் பாடல் வகையாக கவி அமைந்திருக்கின்றது.

'இப்பாடல்கள் உயர்தொனியில் பாடப்படுவன. முதல் மூன்று அரை அடிகளும் உச்ச ஸ்தானியிலும் இறுதி அரையடி மேலிருந்து கீழ் நோக்கி தாழ்ந்த தொனியிலும் பாடி முடிக்கப்படும்'. இதனால் தொலைவில் இருப்பவர்களும் இப்பாடல்களின் இசையை கேட்க முடியும்' என நுக்மான் (எம்.ஏ.1994:2), மற்றும் 'கிழக்கிலங்கையில் கவிகளில் அதிக ஈடுபாடு உடையவர்களாக இஸ்லாமிய மக்கள் உள்ளனர்' என பேராசிரியர் சு.வித்தியானந்தன், வித்துவான் வி.சி.கந்தையா போன்றோரும் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

தொழில் செய்யும் நேரங்களில் களைப்பை போக்கி உற்சாகத்தை ஏற்படுத்துவதற்கும், ஓய்வு வேளையில் தமது பொழுதை கழிப்பதற்கும் விழாக்காலங்களில் நிகழ்ச்சிகளை மெருகூட்டுவதற்கும் என மக்களின் வாழ்க்கையில் அநேக நிகழ்வுகளில் பாடப்பட்டுள்ள இந்தக் கவிமரபானது, வாய்மொழி ரீதியாக ஒரு தலைமுறையினிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு கைமாறி வந்துள்ளது.

இந்த நிலையில், 'எமது கிராமத்தில் நாட்டார் ஊடகத்தை அடையாளம் காணுதல்' எனும் ஆய்வுக்காக அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேசத்திற்குட்பட்ட நற்பட்டிமுனை கிராமத்தில் இஸ்லாமிய மக்களிடையே கவிப் பாடல்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. சுற்றிவர அமைதி ஒருவரையொருவர் முகத்தை பார்த்தபடி அமர்ந்திருக்கின்றனர். நீ பாடு என்று வயதான பெண் கூற, கவிகளை மாறி மாறி பாடத்தொடங்கினர். இதன்போது கவி பற்றி பல விடயங்களை அறிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

'வில்லுக் கரத்தையில', 'கத்தி எடுத்து கிளி கதிரு கொய்யும் வேளையிலே', 'மஞ்சனம் பூசி மகளார் வரம்பால போகக்குல' என்று தொடங்குகின்ற கவிகளை ஒருவர் பாட, 'கடிதத்தை எழுதி மச்சான்', 'பேனை புடுங்கி மகளார்', 'தேங்காய் துருவக்குல நான் தெருவால போகக்குல', 'கல்லோடு கல் அணைய கதவோடு நிலையணைய','நிலவும் பொழுதும் போராடும் வேளையிலே', 'ஈர மண்ணால இடிஞ்சுமுந்தன் சுவரால', 'காக்கொத்து அரிசி இப்ப காலு ரூபா விக்கையிலும்' என்று தொடங்குகின்ற கவிகளை எல்லாம் தொடர்ந்து ஏனையோர் பாடினர். 'அதெல்லாம் இப்ப எங்க ஞாபகம்' என்ற வார்த்தையைக் கேட்டு, ஒரு நிமிடம் மூச்சடைத்த எனக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிகளை சேகரிக்க, வாய்ப்பும் கிடைத்தது. இக்கவிகளில், அன்றைய கால வாழ்வியல், தொழில்கள், சமூக உணர்வுகள், காதலின் அழகு, உறவுகள், குடும்பக் கட்டமைப்பு மற்றும் சமய பண்பாட்டு பழக்கவழக்கங்கள் வெளிப்பட்டு நிற்பதை கவிகளை முழுமையாக கேட்ட தருணங்களில் அறிந்துகொள்ள முடிந்தது. குறிப்பாக, விவசாயத்தை மையப்படுத்தியதாக வருகின்ற கவிகளில், விவசாயிகளின் உழைப்பு, வாழ்க்கைமுறை, அறுவடை செய்யும் போது ஏற்படும் மகிழ்ச்சி, அவர்களின் உறவுகளைப் பற்றிய கவலைகள் ஆகியவை வெளிப்பட்டு நிற்கின்றன.

இந்தக் கவிகள் தொடர்பில், முதன்முதலாக யாரால் பாடப்பட்டது என்பதனை கூற முடியாமல் இருப்பதாகவும், தலைமுறை தலைமுறையாக மனனம் செய்யப்பட்டே பாடப்படுவதாகவும், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, அக்கரைப்பற்று, நிந்தவூர், ஒலுவில் போன்ற பிரதேசங்களிலும் கவிகள் பிரபலமாக வழக்கில் இருப்பதையும் இதன்போது தெரிவித்திருந்தனர்.

செவிப்புலன் மூலமான அழகியல், அனுபவப் பெறுகைகளை வழங்கும் இந்தப் பாடல்மரபு, உளரீதியாக ஒருவரை ஆற்றுப்படுத்தக் கூடியதாகவும், நேரடியாகவும், தேவைக்கேற்ப புதிய உருவாக்கங்களாகவும் பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டு விடயங்களை பேசுவதாகவும் அமைந்து, அபிவிருத்தித் தொடர்பாடலிலும் முக்கியபங்கையாற்றுவதாக விளங்குகின்றது.

தலைமுறை தலைமுறையாக இளைய தலைமுறையினருக்கு, செழுமை நிறைந்த மொழிப்புலமையோடு கூடிய அறிவானது பரிமாறப்படவும், காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்ற வழக்காறுகள், நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் வழியே பண்பாட்டு பரிமாற்றத்தை வளர்க்கின்ற ஊடகமாக காணப்படுவதும், ஆரம்பகாலத்தில் மக்களிடையே காணப்படுகின்ற மனோநிலைகளை வெளிப்படுத்தவும், பொழுதுபோக்கு மற்றும் குழு ஒற்றுமை,விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகளை வளர்க்கவும், கவி முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக அமைந்திருந்திருக்கின்றது.



இன்றைய காலங்களில் வாழ்க்கை முறையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் குறிப்பாக 'நவீன நிலைகளுடன் கூடிய வாழ்க்கை முறைக்கு மக்கள் பழகிக் கொண்டமை, தொழில் முறைகளில் ஏற்பட்டிருக்கின்ற இயந்திரமயமாக்கம், பொழுதை கழிப்பதற்கான ஓய்வு நேரம் இல்லாமல் போனமை கவிப் பாடல்களைப் பாடுவது மக்களிடையே குறைவடைய முக்கிய காரணங்களாகும்' என்று கவி பாடிய மக்கள் தெரிவிக்கின்றனர். காலங்களின் சுழற்சியில் கவிகளை இளைய தலைமுறையினர் கேட்டு மகிழ்வதற்கான உளப்பாங்குகளை வளர்த்துக்கொள்வதோடு அவை மறைந்து விடாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்பதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மக்கள் பிரதிநிதிகளில் பெண் பிரதிநிதித்துவம்

■ ஆசீர்

பல்லினமக்கள் வாழும் இலங்கையில், நாடாளுமன்றத் தேர்தல் அண்மிக்கும் வேளையில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் ஆரம்பித்துள்ளன. பல்வேறு கட்சிகள், சின்னங்கள், நிறங்கள் என்று மக்கள் முன் களமிறங்க ஆரம்பித்துள்ளமையானது பல சிந்தனைகளை எம்மிடையே தோற்றுவித்துள்ளது. இந்தக் காலச்சூழலில் நாடாளுமன்றப் பெண் பிரதிநிதித்துவம் தொடர்பில் நாம் சிந்திக்கவேண்டியது அவசியம்.

இலங்கையில் 52 வீதமானவர்கள் பெண்களாக உள்ள போதிலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தளவில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. தேர்தலில் பெண்களுக்கு இடஒதுக்கீடு தொடர்பில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுகின்ற போதிலும் அதன் சாத்தியப்பாடுகள் இன்னமும் மெய்ப்பட்டதாயில்லை.

## வரலாற்றில் பெண்கள்

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் பெண்களிற்கு வாக்குரிமை கிடைக்கமுன்பே இலங்கையில் 1931ஆம் ஆண்டு ஆண்களுக்கு நிகராக பெண்களும் வாக்களிக்கலாம் எனும் உரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. 1931-1935 காலப்பகுதியில் முதலாவது அரசுப் பேரவை தேர்தலில் திருமதி அட்லின் மொலமுற என்ற சிங்களப் பெண்ணும், திருமதி நேசம் சரவணமுத்து எனும் தமிழ்ப் பெண்ணும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு வரலாற்றில் முதல் பெண் பிரதிநிதிகளாக பதிவாகினர்.

அதன் பின்னர் 1947ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்ற தேர்தலில் மூன்று சிங்களப் பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். 1970-1972களில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற வரலாற்று தடத்தைப் பதிவு செய்தார். 1994-2000 ஆண்டு காலப்பகுதியில் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாடாளுமன்றுக்குத் தெரிவாகி நிறைவேற்று அதிகாரமுள்ள பெண் ஜனாதிபதியாக தன்னைப் பதிவுசெய்தார். இவருடைய ஆட்சிக்காலத்தில் பெண்களின் உரிமைகளுக்குக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. பொலிஸ் நிலையங்களிலும் பிரதேச செயலகங்களிலும் சிறுவர், பெண்கள் பிரிவுகள் கட்டாயமாக்கப்பட்டதுடன் பெண்கள் சிறுவர் தொடர்பான உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டனர். 2004 முதல் 2015 வரை நடைபெற்ற மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களிலும் முறையே 1 - 3 பெண்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டனர். இறுதியாக 2020 ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 12 பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் தமிழ், முஸ்லிம் பெண்கள் தெரிவு செய்யப்படாமையானது வருத்தத்துக்குரிய விடயமாகும்.

## உள்ளாட்சிச் சபைகளில் பெண் பிரதிநிதித்துவம்

மாகாணசபைகளில், உள்ளூராட்சி மன்றங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இந்தச் சபைகளுக்கு பெண்கள் உள்வாங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் பல வருடங்களாக பல்வேறு தரப்புகளால் முன்வைக்கப்பட்டன. பல்வேறு அமைப்புகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசசார்பற்ற அமைப்புகள் என்பவற்றால் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள், மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுகள் மற்றும் செயற்றிட்டங்களால் 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலில் 25 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதன் பயனாக இலங்கையின் உள்ளூராட்சி சபைகளில் 1.9 வீதமான பெண்கள் உறுப்பினராகும் வாய்ப்பைப் பெற்றார்கள். ஆனால் மாகாணசபைத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. சில மாகாணசபைகளில் பூச்சிய சதவீதமாகவே காணப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டு 93 ஆண்டுகள் கடந்து சென்றாலும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் கேள்விக்குள்ளாகின்றதைக் காண்கின்றோம். சார்க் நாடுகளில் நாடாளுமன்ற பெண் பிரதிநிதிகள் தொடர்பான கணிப்பில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு போன்ற நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. உலக நாடாளுமன்றங்களின் ஆய்வில் 188 நாடுகளில் இலங்கையானது 130ஆவது இடத்தில் இருக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

## றுவாண்டாவின் பாதை

மத்திய ஆபிரிக்க நாடான றுவாண்டா 1994ஆம் ஆண்டில் உள்நாட்டு இனப்படுகொலையை எதிர்கொண்டது. 100 நாட்களில் 8 லட்சம் துட்சி இனத்தவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதனால் அந்நாடு வறுமையான நிலையுடன் பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்தித்தது. இழந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அந்நாட்டுப் பெண்கள் முன்வந்தார்கள். இதனை ஆண்கள் ஏளனம் செய்தனர். பெண்களால் என்ன செய்யமுடியும் என்று ஆணாதிக்க சிந்தனையுடன் நோக்கினர், அதனைப் பொருட்படுத்தாது நாடாளுமன்றத் தேர்தலில் பெண்கள் போட்டியிட்டார்கள். 80 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட றுவண்டா நாட்டில் 49 பெண்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

பெண் பிரதிநிதித்துவம் 58 வீதமாகக் காணப்பட்டது. இதுவே உலகில் அதிகமான பெண்களைக் கொண்ட நாடாளுமன்றமாகத் திகழ்ந்தது. றுவாண்டாவின் பொருளாதார வளர்ச்சியில் மூன்றில் ஒரு பகுதியை பெண்கள் அர்ப்பணிப்பான சேவையூடாக நிலை நாட்டினர். இத்தனைக்கும் றுவாண்டாவின் கல்வியறிவு வீதம் 77 ஆகக் காணப்பட்டது. 77 வீத கல்வியறிவைக் கொண்ட அந்த நாட்டில் 58 பெண்களை மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தார்கள் என்றால், 97 வீதமான கல்வியறிவுள்ள எம் நாட்டில் 5.8 வீதமான பெண்களை அதுவும் அனுதாப வாக்குகளாலும் தேசியப் பட்டியல்களாலும் தெரிவுசெய்கின்றோம் என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

இலங்கையானது முதல் பெண் பிரதமர், முதல் நிறைவேற்று அதிகாரமுள்ள பெண் ஜனாதிபதி, பெண் நீதியரசர், பெண் சட்டமா அதிபர், பெண் ஆளுநர் என்று பல்வேறு பெண் ஆளுமைகளைக் கண்டுள்ளது. பல்கலைக்கழகங்களிலிலும் அரச அலுவலகங்களிலும் பெண்களை அதிகமாகக் கொண்டிருந்தாலும் அரசியலில் பெண்களின் பிரவேசம் குறைவாகவே காணப்படுகின்றது. 52 வீதமான பெண்களைக் கொண்ட எம்நாட்டில் 5.8 வீதமான பெண்களை நாடாளுமன்றம் அனுப்புவது எந்த வகையில் நியாயமானது? இன்றைய மாற்றத்துக்கான காலங்களை பயன்படுத்தி ஊழலற்ற நேர்மையான, அர்ப்பணிப்புள்ள, அறிவார்ந்த பெண்களை தெரிவுசெய்து நாடாளுமன்றம் அனுப்பவேண்டியது ஒவ்வொரு இலங்கையரின் கடமையாகும். ■



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சித்திர முத்திரைகள்' ஓவிய, பொருள் கண்காட்சி

எஸ்.கிரிஸ்டினா
மூன்றாம் வருட மாணவி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் எட்டாவது ஆண்டாக 'சித்திரமுத்திரைகள்' என்னும் ஓவிய,கைவினைப் பொருள்களின் கண்காட்சி திருமறைக் கலாமன்றத்தின் ஊடாக, வெளியீட்டுப் பிரிவின் இணைப்பாளர் கி.செல்மர் எமில் தலைமையில் கல்லூரியின் வளாகத்தில் கடந்த 18 ஆம் திகதி முதல் 21 அம் திகதி வரை சிறப்பாக நடைபெற்றிருந்தது.

நிகழ்வில், கல்லூரியின் உப அதிபர் அருட்தந்தை செ.அன்புராசா அடிகள் ஆசியுரையையும், திருமறைக் கலாமன்றத்தின் உதவி நிர்வாக இயக்குநர் அருட்தந்தை அ.அன்ரன் ஸ்ரிபன் அடிகளார் சிறப்புரையையும் வழங்கினார்கள். தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இக் கல்லூரியின் ஆரம்ப கால சித்திர பாட ஆசிரியர்களில் ஒருவரான திருமதி ஜெயராணி அம்பலவாணரும் உரையாறினார். பிரதம விருந்தினர் கல்லூரிக்கு ஆற்றிய பணிகளுக்கு மதிப்பளித்து கல்லூரிச் சமூகத்தால் பொன்னாடை போர்த்தி,மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினரால் நாடா வெட்டி கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரப் பாடத்தைப் பயில்கின்ற மாணவர்களதும் அயல் பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்களதும் ஆக்கங்களைக் கொண்டதுமான இக்கண்காட்சியை பல நூற்றுக் கணக்கானோர் பார்வையிட்டிருந்தார்கள்.

என்னதான் தொழில் நுட்ப உலகம் எம்மை ஆக்கிரமித்திருந்தாலும் கலை சார்ந்த ஈடுபாடுகளும், ஆற்றல்களும் எம் மாணவர்களிடம் இன்னமும் அற்றுப் போய்விடவில்லை என்பதை 'சித்திர முத்திரைகள்' மிகத் தெளிவாகவே வெளிப்படுத்தியது. இவற்றை மாணவர்கள் மத்தியில் வளர்ப்பதற்கு போதிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் இம்முயற்சி வரவேற்புக்கும்,பாராட்டுக்குமுரியது.











# அவமானத்தை எதிர்கொண்டால் வெற்றி நம்மை அரவணைக்கும்

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)

ஒருமுறை மேடையில் அப்துல்கலாம் உரையாற்றும்போது, "நான் எனது உயர்படிப்பை முடித்துக் கொண்டு விமானியாக வேண்டும் என்ற கனவுடன் ஒரு நேர்காணலுக்கு சென்றிருந்தேன். முடிவில் நிராகரிக்கப்பட்டேன். விமானி ஆகவேண்டும் என்ற கனவு நிராகரிப்பு எனக்கு கவலையாக அமைந்ததுடன், மிகவும் மன உளைச்சலுக்கு உள்ளாகி வீடு திரும்பினே். செல்லும் வழியில் சிவானந்தரை தரிசித்து சென்று விடுவோம் என்று அங்கு சென்று மக்கள் கூட்டத்துடன் ஒருவராக சிவானந்தர் முன்னிலையில் நின்றேன். அப்போது சிவானந்தர் நான் சோகத்துடன் முகவாட்டமாய் இருந்ததை இனங்கண்டு, என்னை அழைத்து பகவத் கீதையில் ஒரு பக்கத்தில் இருந்த "இடும்பைக்கு இடும்பை கொடு" என்ற வாசகத்தினை வாசித்துக் காட்டினார். இந்த தத்துவமானக் கருத்துத்தான், என்னுடைய துன்பகரமான நிலையும் மாறும், மாற்றவேண்டும் என்ற தைரியத்தை அன்று எனக்குக் கொடுத்தது" என்றார்.

சாதாரணமாக இருந்த அப்துல்கலாமின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டதில் நேர்காணலில் கிடைத்த நிராகரிப்பு அனுபவம் பெரிதும் வழிசெய்திருக்கிறது என்றால் எங்களுடைய வாழ்விலும் அவ்வாறான நிராகரிப்புகள், அவமானங்கள் போன்றன எங்களையும் அடுத்த நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதுதான் உண்மை. வெற்றியை விரும்பாத ஒருவரிடம் அந்த அவமானமும், நிராகரிப்புகளும் நண்பராகி விடுவதில்லை. யார் சாதிக்கவேண்டும் என்ற முனைப்புடன் இருக்கின்றாரோ அப்படியானவர்களையே இயற்கை சோதிக்கும். அவமானம், நிராகரிப்பை யாரும் எளிதில் விரும்பிவிடுவதில்லை. ஏனெனில் அவை மனிதர்களின் மனங்களில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

இந்தத் தாக்கம் பலரை தற்கொலை செய்துவிடத் தூண்டுகிறது. ஆனால் சிலரை மட்டும் சாதாரண மனிதன் என்ற நிலையில் இருந்து அசாதாரண மனிதனாக உலகத்தில் அவர் நினைத்த உச்சிக்குக் கொண்டு போய் நிறுத்திவிடுகின்றது.

நிக்வியூயிக், இவர் அமெரிக்காவில் உள்ள சிறந்த ஊக்குவிப்பு பேச்சாளர். உலகம் முழுவதும் தன்னுடைய பேச்சுகளால் பலரைக் கவர்ந்தவர். இவருக்கு பிறக்கும் போதே இரண்டு கைகளும், கால்களும் இல்லாமல் தான் பிறந்தார். அதன் பின்பு அவர், பாடசாலைக்கு சென்றபோது பாடசாலைகளும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. விசேட தேவையுடையவர் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டார். பலர் அவரை அவமானப்படுத்தினார்கள். அதனால் பலமுறை தற்கொலை முயற்சிக்கும் தள்ளப்பட்டிருந்தார். அவருடைய பெற்றோரின் தன்னம்பிக்கையான வார்த்தையைக் கேட்டு மனம் திரும்பிய நிக்வியூயிக் பின்னாளில் உலகம் போற்றும் ஒரு மனிதனாக உருவாகினார்.

அவமானங்களை ஏற்றுக்கொள்ளாத மனநிலையில் இருந்து நாம் இப்போது மாறவேண்டும் என்று இந்த விதி கூறுகின்றது.

அவமானங்களின் பின் வாழ்வா? சாவா? என்ற கேள்வியில் சாவை தெரிந்தெடுத்தால் நமக்கும், இயற்கைக்கும், இறைவனுக்கும் நாம் செய்யும் குற்றமாக இருந்துவிடும். எனவே எங்களை அவமானப்படுத்துபவர்களை எதிரியாக பார்க்காது, எமது வெற்றிக்குத் துணை செய்பவர்களாகக் கொண்டு வாழ்வில் மாபெரும் வெற்றியை அடைந்திடுவோம்.

*'உன்னால் எதைச் செய்ய முடியாது என்று மற்றவர்கள் சொல்கிறார்களோ, அதைச் செய்து காட்டுவதுதான் மிகப் பெரிய இன்பம்"*

*(நபிகள் நாயகம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கிவருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு ஆண் பராமரிப்பாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

021 226 5551
077 810 6857

(CS/56512) J-1

## 13ம் ஆண்டு நினைவஞ்சலி




**அமரர் செல்லத்துரை வினோகரன்**

(திதி : 23.10.2024 - ஷஷ்டி)

ஆண்டுகள் பதின்மூன்று ஆனதென்று
அழுதிங்கு புலம்புகின்றோம்
கோடி ஆண்டுகள் ஓடியிங்கு போனாலும்
அழியாது என்றென்றும் அழகான உன் நினைவுகள்.

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்
இடைக்குறிச்சி மேற்கு,
வரணி.

(CS/28734) J-1

## மரண அறிவித்தல்




### பூபாலசிங்கம் நகுலேஸ்வரி

புன்னாலைக்கட்டுவன் வடக்கினை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் நகுலேஸ்வரி அவர்கள் 21.10.2024 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் பூபாலசிங்கம் அவர்களின் மனைவியும், பகீரதன் -மதுரிகா, பூபாலசிங்கம் கிருஸ்ணபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (23.10.2024) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பழனி கோயில் வீதி
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்

தகவல்:
குடும்பத்தினர்

(CS 56511) V-1

## கம்மன்பிலவை தொடர்ந்து ரணிலும் அறிக்கை

கொழும்பு, ஒக். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் அமைச்சர் உதயகம்மன்பில வெளியிட்ட அறிக்கை தொடர்பாக இன்று விசேட அறிக்கையொன்றை வெளியிடப்போவதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்கள் பற்றியும் இரண்டு குழுக்களும் வெளியிட்ட அறிக்கைகள் தொடர்பாகவும் தனது அறிக்கையில் ரணில் விக்கிரமசிங்க இன்று வெளியிடவுள்ள அறிக்கையில் தெரிவிப்பார் என ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-6)

## வீடு வாடகைக்கு விடப்படும்

இல: 18/01, வைமன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

077 892 6008

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hardware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
077 077 6469, 077 494 9683

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, புங்கன்குளம் வீதியில் ஈச்சமோட்டைக்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
074 141 0806, 006 142 154 4878
Mail - Packicool@hotmail.com

## கண்ணீர் அஞ்சலி




### திரு தம்பிராசா பொன்னம்பலம்

*(Retired Civil Engineer)*

(ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய உபதலைவர்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா பொன்னம்பலம் அவர்கள் 21.10.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இல.591 காலி வீதி கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 24.10.2024 வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வண்ணுடைக்கைசை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள்
ஆனைக்கோட்டை ஆலயம் தர்மகர்த்தா சபை

(CS 1184) V-1

## குருதிக் கொடை !

முல்லைத்தீவு, ஒக். 23

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரிச் சமூகம் நடாத்தும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை இடம் பெறவுள்ளது. (ம22,66)

## மாற்றுத்திறனாளிகளுக்கு வாசிப்பு மாதப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.23

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுச் சுன்னாகம் பொதுநூலகம் மாற்றுத் திறனாளி மாணவர்களிடையே, பாடல், நடனம், ஓவியம் வரைதல் மற்றும் இசைக்கருவி மீட்டல் ஆகிய போட்டிகள் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி மாணவர்கள் அனைவரும் பங்கேற்க முடியுமெனவும், போட்டிகளில் பங்கேற்க விரும்புவோர் முன்னதாகச் சுன்னாகம் பொதுநூலக நிர்வாகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25,66)

## பரிசளிப்பும் நிறுவுநர் நாளும்

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்.தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை யின் பரிசளிப்பும், நிறுவுநர் நினைவு நாளும் அதிபர் திருமதி இன்பமதி பாலசுந்தரம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வலிகாமம் வலயப் பதில் கல்விப் பணிப்பாளர் திருமதி.லா.சுகந்தன் பிரதம விருந்தினராகவும், துர்க்காபுரம் கிராம அலுவலர் இ.இந்திரஜித் சிறப்பு விருந்தினராகவும், துர்க்காபுரம் சமுர்த்தி அலுவலர் திருமதி மனோரஞ்சன் ஜெயரூபி, தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர் ந. உமாகரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களா கவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25.66)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஒக்.23

வட்டுக்கோட்டை சிவபூமி தேவாரமடத்தினின் ஏற்பாட்டில் மாதாந்தத் திருவாசக முற்றோதல் நிகழ்வு தெல்லிப்பழை பிரதான வீதி, வட்டுக்கோட்டை சங்கரத்தையில் அமைந்துள்ள மேற்படி தேவார மடத்தில் நாளை வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது. (ச-45-66)

## விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்., ஒக் 23

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவினால் பாரம்பரிய போஷாக்கு உணவை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு முகமாலை கிராம அலுவலர் பிரிவில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. வளவாளராக சமூக மருத்துவர் சி.நிரோசன் கலந்து கொண்டார். (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி ஊடாக பாலியல் தொல்லை இளம்பெண் பொலிஸாரிடம் முறைப்பாடு!

முல்லைத்தீவு, ஒக். 23

முல்லைத்தீவில் தொலைபேசியைத் திருத்தக் கொடுத்த இளம்பெண்ணுக்கு, அவரது தொலைபேசியிலிருந்த படங்களை அனுப்பி பாலியல் மிரட்டல் விடுத்த சம்பவம் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவு நகரிலுள்ள தொலைபேசி திருத்தும் கடையில் தொலைபேசியைத் திருத்துவதற்காக இளம்பெண் கொடுத்துள்ளார். தொலைபேசியைத் திருத்தியும் பெற்றுச் சென்றுள்ளார்.

தொலைபேசியில் இருந்த படங்கள் குறிப்பாக இளம்பெண்ணின் படங்கள் திருடப்பட்டு இன்னொரு இளைஞனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இளம்பெண்ணை அந்த இளைஞன் தொடர்பு கொண்டு தொலைபேசியில் திருடப்பட்ட படங்களை அனுப்பி மறைமுகமாக பாலியல் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பால் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(அ-ஒ-19)

## ரஷ்ய...

வாய்ப்புக்காகவும் ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ளனர். இவ்வாறு இணைந்த இலங்கையர்களை மீட்டு நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு அநுர அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இந்த முயற்சிகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முப்படை வீரர்கள் தொழில் வாய்ப்புக்காக ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ளனர். இவ்வாறு இணைந்தவர்களில் பெருமளவானவர்கள் காணாமல் போயுள்ளனர். இது தொடர்பில் இலங்கையிலுள்ள ரஷ்ய தூதுவரிடம் கலந்துரையாடி சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அதற்கமைய இவ்வாறானவர்களை மீண்டும் ரஷ்ய இராணுவத்தில் இணைத்துக் கொள்ளாமல் இருப்பதற்கும், தற்போது காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் தகவல்களை ஆராய்ந்து வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியாக ரஷ்ய இராணுவத்தில் இணைந்திருந்தால் அவர்களை இலகுவாக நாட்டுக்கு அழைத்து வரமுடியும். ஆனால் இவர்கள் சட்டத்துக்கு முரணான வகையில் இணைந்துள்ளனர். அத்துடன், பலர் அந்த நாட்டின் குடியுரிமையைப் பெற்றுள்ளனர். இவ்வாறான விடயங்கள் மீட்பு நடவடிக்கைகளை சிரமத்துக்குள்ளாக்கியுள்ளன என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார். (அ-ம)

## அரிசி...

என ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்துள்ளார்.

அரிசி வியாபாரிகள் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயத் திட்டத்தை உருவாக்கி விவசாயிகளுக்கு அதிக நன்மைகளைப் பெறுவதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் நுகர்வுப் பொருட்களின் தற்போதைய விலை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதுடன், மக்களின் பிரதான உணவாகப் பயன்படுத்தப்படும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நிர்ணய விலை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் அரிசியின் விலையை மாற்றுவது நியாயமல்ல எனவும் அரிசி வியாபாரிகளிடம் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

விவசாயிகளிடம் இருந்து அரிசியை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை வழங்குவதற்கும் முறையான பொறிமுறையொன்று அவசியம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (அ-ம-6)

## மாகாண...

செயலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. இதன்போதே, மாகாண நிர்வாகத்தைப் பலப்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தலை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் வாழ்க்கையை இலகுவாக்கும் வகையில் மாகாணசபைகளால் சாத்தியமான அனைத்துப் பொருளாதார மற்றும் சமூக தலையீடுகளையும் மேற்கொள்ள ஆளுநர்கள் வினைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

புதிய அரசியல் கலாசாரமொன்றை ஆரம்பிப்பதற்காகவே மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். அந்த ஆணையை நாம் அர்த்தமற்ற வகையில் பாதிப்புற அனுமதிக்கக்கூடாது. அரசாங்க சொத்துகளைப் பயன்படுத்துவதில் முன்னைய மோசமான முன்னுதாரணங்களை புறமொதுக்கிவிட்டு, தரமான அரச சேவையை நாம் வழங்கவேண்டும் - என்றார். (அ-ம-6)

## ரணிலுக்கு...

ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற்குப் பொலிஸார் தாக்குதல் நடத்தியமை குறித்த வழக்கிலேயே, முன்னாள் ஜனாதிபதியை பிரதிவாதியாகச் சேர்ப்பதற்கு உயர்நீதிமன்றம் அனுமதிவழங்கியுள்ளது.

இந்த மனுக்களை நேற்று ஆராய்ந்த வேளை சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோள்களை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதிவாதியாக குறிப்பிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (அ-ம)

## பொருளாதார...

தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக நடவடிக்கைகளுக்காக மீள ஆரம்பிப்பதுடன், பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து விவசாயம் மற்றும் பழ வகைகள் போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வெளிமாவட்டப் பொருளாதார மத்திய நிலையங்களுக்கும், ஏனைய இடங்களுக்கும் அனுப்பி வைப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் யாழ்.மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி சிறிரங்கன், சாவகச்சேரிப் பிரதேச செயலாளர், சாவகச்சேரிப் பிரதேசசபையின் செயலாளர், பொருளாதார மத்திய நிலைய முகாமையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர், சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய அதிகாரி, வர்த்தகப் பிரதிநிதிகள், பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகளை குத்தகைக்கு எடுத்த குத்தகைக்காரர்கள் மற்றும் மாவட்டச் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-66)

## சீனாவிடமிருந்து...

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை நேற்றுச் சந்தித்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் இந்த உதவித் தொகையை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதற்கும் வெள்ளத்தடுப்புமற்றும் முகாமைத்துவம் தொடர்பாக எடுக்கவேண்டிய நீண்டகால உத்திகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

மேலும், எதிர்கால வெள்ள நிலைமைகளைத் தடுப்பதற்கும், அவ்வாறான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துவதற்கும் பின்பற்றக்கூடிய நிலையான தீர்வுகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (அ-ஒ-இ)

## சிறுமி...

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியை கைவேலியைச் சேர்ந்த இளைஞன் பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளமைக்கு அமைய சிறுமி அழைத்துவரப்பட்டு சட்டமருத்துவ அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கைவேலியைச் சேர்ந்த இளைஞனைக் கைதுசெய்ய பொலிஸார் தேடுதலை ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ-19)

## ஆலய...

இதையடுத்து ஆலயத்தில் இருந்த வாழைப்பழத்தை அவருக்கு உண்ணக் கொடுத்துள்ளனர். அதன் பின்னரும், அவர் சந்தேகத்துக்குரிய வகையில் ஆலய வளாகத்தில் நடமாடித் திரிந்துள்ளார். இரவு 9 மணியளவில் அவர் ஆலய உண்டியலைத் திருடிக்கொண்டு ஆலயத்தின் பின்பகுதி வழியாகத் தப்பியோடியுள்ளார். இதை அவதானித்த காவலர்கள், அவரை விரட்டிச் சென்று மடக்கிப் பிடித்தனர். ஊரவர்களும் சம்பவ இடத்தில் கூடியதைத் தொடர்ந்து, பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டு அவர் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். (அ-ம-100-159)

## காணி...

யாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், பாதைகள் விடுவிப்புத் தொடர்பிலும் பரிசீலிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர, தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிஸ்சந்திர, மத்திய மாகாண ஆளுநர் சரத் பண்டார சமரசிங்க அபயகோன் மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த குமார விமலசிரி ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ-ம-26)

## போதை...

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## லலித்,...

கோத்தாபய ராஜபக்ச, தனது சட்டத்தரணி ரொமேஸ் சில்வா ஊடாக உயர்நீதிமன்றத்துக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்பினைச் சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தத் தகவலை கோத்தாபய நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே, யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியாது என்றும் கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 31,339 ஏக்கரில் காலபோகம்



**மன்னார், ஒக்.23**

**கட்டுக்கரைக் குளத்தின் கீழ் நடப்பு வருட காலபோகத்தில் 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்ட கட்டுக்கரைக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் காலபோக விவசாயச் செய்கை தொடர்பான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி விதைப்பு இறுதித் திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதலாவது நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

நீர்ப்பாசனக் குளங்களுக்குச் சொந்தமான குளக் காணிகளில் அத்துமீறி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,





# தேசியமட்ட கோலூன்றிப்பாய்தல் சாவ.இந்துக்கல்லூரி சாதனை

யாழ்ப்பாணம், ஒக்.23

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகளின் வரிசையில் கோலூன்றிப்பாய்தல் 18 வயதுப் பெண்கள் பிரிவில் யாழ்.சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவி ப.அபிசாளினி 2.8 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ணச்சான்றிதழுடன் முதலிடத்தையும். 16 வயது ஆண்கள் பிரிவில் ஆ.கோசிசன் 3.5 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ணச்சான்றிதழுடன் முதல் இடத்தையும் 18 வயது ஆண்கள் பிரிவில் சு.கஜானன் 4 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ணச்சான்றிதழுடன் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள். அதே போன்று கடந்த வருடங்களில் பெண்கள் பிரிவில் நே.டக்சிதா 3.72 மீற்றர் உயரம் மற்றும் ஆண்கள் பிரிவில் அ.புவிதரன் 5.17மீற்றர் உயரம் பாய்ந்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

# சட்டவிரோத மணலகழ்வு வாகனம் மடக்கிப் பிடிப்பு

சாவகச்சேரி, ஒக்.23

அனுமதிப்பத்திரம் இல்லாது மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தைப் பின் தொடர்ந்து சென்ற பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். இந்தச் சம்பவம் மீசாலை சந்திக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

கச்சாய்ப் பகுதியிலிருந்து மணலுடன் மீசாலை நோக்கிவந்த உழவு இயந்திரம் ஏ-9 பிரதான வீதியைக் கடந்து சென்றபோதே இந்தக் குற்றச் செயல் முறியடிக்கப்பட்டதோடு உழவுஇயந்திரச் சாரதியும் கைதுசெய்யப்பட்டார். (ச-45-131)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

வகுப்புக்கள்
தரம் ஐந்து வரையான மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களும் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்
தொடர்பு: 077 311 6202
(CS 1674) V-1

பராமரிப்பாளர் தேவை
விடுதியொன்றுக்கு இரவுநேரப் பராமரிப்பாளர் தேவை. ஆர்வமும் தகுதியும் உடையவர்கள் நேரில் வருகை தரவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
இல. 392/6 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



காணி குத்தகைக்குத் தேவை
யாழ்மாவட்டத்தில் தோட்டம் செய்வதற்காக ஒரு ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட விவசாயக்காணி குத்தகைக்குத் தேவை. காணி உரிமையாளர்கள் அல்லது தரகர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 076 588 8395, 076 676 3012
(CS 66514) V-1

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
இன்றுமுதல் (04.10.2024) தீபாவளி தினம் வரை
இந்தியன் செலக்ஷனின்
பிரமாண்டமான தீபாவளி
SPECIAL OFFER!
ஜவுளிக் கொண்டாட்டம்



சாறி OFFER விசேட விலைக் கழிவு

| | |
|---|---|
| ~~1500/=~~ | 1000/= |
| ~~3000/=~~ | 2000/= |
| ~~3500/=~~ | 2500/= |
| ~~4000/=~~ | 2800/= |
| ~~6000/=~~ | 4000/= |

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறொக் என ஏராளமான ஆடைத்தெரிவுகள்
இம்முறையும் தீபாவளியை
இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாடுங்கள்
காலம் : 04.10.2024 - தீபாவளி தினம் வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.